# கலைஞர் நூற்றாண்டு நிறைவு - சட்டமும் நீதியும் திட்டமும் செயல்பாடும்!

தமிழ்நாடு மக்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என அன்புடன் அழைத்திடும் முத்துவேல் கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் தலைசிறந்த மூத்த அரசியல் வல்லுநராகவும், திரை உலகக் கலைஞராகவும், உலகம் போற்றும் உன்னதத் தமிழ் அறிஞராகவும் விளங்கியவர்.

கலைஞரின் நூற்றாண்டு விழா 3.6.2023 முதல் தொடங்கி மிகச் சிறப்பாக நடந்து வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் 1924ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் நாள் தஞ்சை மாவட்டத்தில் (இன்றைய நாகப்பட்டினம்) உள்ள திருக்குவளை என்னும் சிற்றூரில் எளிய குடும்பத்தில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் ஒரே மகனாகப் பிறந்தார்.

ஆரம்பப் பள்ளிப் படிப்பைத் திருக்குவளையிலும், உயர்நிலைப்படிப்பைத் திருவாரூரிலும் படித்து முடித்தார்.

தனது 14 வயதிலேயே சமூகப் பணி, பொதுப் பணி, எழுத்துப்பணி, அரசியல் பணி எனத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார்.

இவரது அரசியல் பயணம் தந்தை பெரியாருடன் தொடங்கி, அறிஞர் அண்ணாவுடன் தொடர்ந்து தி.மு.க.வில் சிறப்பாக நடைபெற்றது. தி.மு.க.வில் தொடர்ந்து பல பதவிகளை வகித்து அண்ணாவின் மறைவுக்குப் பிறகு தி.மு.க.வின் தலைவரானார். 1969லிருந்து 2018 வரை தி.மு.க.வைத் தொடர்ந்து ஆற்றல் வாய்ந்த இயக்கமாக நடத்திய பெருமை இவரையே சாரும். 1967-69 வரை அண்ணாவின் அமைச்சரவையில் அமைச்சராகவும் 1969 முதல் 71 வரை முதல் முறை முதலமைச்சராகவும், 1971-76 இரண்டாவது முறை முதலமைச்சராகவும், 1989-91 வரை மூன்றாவது முறை முதலமைச்சராகவும் 1996-2001 வரை நான்காவது முறை முதலமைச்சராகவும் பணிபுரிந்தார். 2006 முதல் 2011 வரை ஐந்தாவது முறை முதலமைச்சராக பணிபுரிந்தார். நீண்ட நாள் முதலமைச்சராக இருந்து பெருமை இவரையே சாரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கல்லக்குடி பெயர் மாற்றப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசிப் போராட்டம் எனப் பல போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றார்.

'பராசக்தி' திரைப்படத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய கதை வசனம் இவருக்கு மிகப் பெரிய செல்வாக்கையும் செல்வத்தையும் தேடித் தந்தது. தொடர்ந்து பல படங்களுக்குக் கதை, வசனம், பாடல்கள் எழுதினார். சொந்தமாகத் திரைப்படங்கள் தயாரித்தார்.

பதவியில் இல்லாத காலங்களில் தொடர்ந்து திருக்குறள், தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கியங்களுக்கு உரை எழுதினார். சிறுகதை நாவல், கவிதை எனப் பலவும் எழுதித் தமிழ்மொழிக்குப் பெரும் தொண்டாற்றி, இதன் தாக்கத்தால்தான் முதலமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் காலத்தில் செம்மொழித் தகுதியைத் தமிழ் மொழிக்கு பெற்றுத் தந்தார். செம்மொழி மாநாட்டினையும் கோவையில் உலகம் வியக்கும் வண்ணம் நடத்தினார்.

வழக்கறிஞர்
**வி.ஆர்.எஸ்.சம்பத்**
ஆசிரியர் 'சட்டக்கதிர்'



1918 லிருந்து நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் வரை அனைத்துத் திராவிட இயக்கங்களிலும் நிறைவேறிய முற்போக்கு, சுயமரியாதை, பகுத்தறிவு ஆகிய தீர்மானங்களைத் தனது ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றினார்.

கலைஞருடைய பெரு முயற்சியால் 6.12.2006 ல் அன்று அவர் முதலமைச்சராக இருந்தபோது பேரவையில் உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கலைஞரால் நிறைவேற்றப்பட்ட சட்டமன்றத் தீர்மானங்கள், திட்டங்கள், மனித உரிமை, சமூக நீதி, வளர்ச்சிப் பணிகள் அடிப்படையில் உருவானவை.

கை ரிக்சா ஒழிப்புத்திட்டம்,

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி,

இலவசக் கண் கண்ணாடி வழங்கும் திட்டம்,

குடிசைப் மாற்று வாரியம்,

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகங்கள் உருவாக்கம்,

குடிசையில் வாழ்வோர்க்கு இலவச மின்சாரம்,

விவசாயப் பெருமக்களுக்கு இலவச மின்சாரம்,

பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி,

தூய்மையான குடிநீர் வழங்கத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை உருவாக்கியது,

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய "நீராருங் கடலுடுத்த" பாடலைத்

தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தது,

தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெற்றுத் தந்தது,

இந்து மதத்தில் உள்ள அனைத்து சாதியினரும் சேர்ந்து வாழப் 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' ஏற்படுத்தியது,

உழவர் சந்தை உருவாக்கம்.

'மெட்ராஸ்' என்பதனைச் 'சென்னை' எனப் பெயர் சூட்டுதல்,

தமிழ்நாடு முழுவதும் அரசு கலை அறிவியல் கல்லூரிகளை நிறுவுதல்,

பல்கலைக்கழகங்கள் பலவும் உருவாக்குதல்,

போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்கல். காவிரி நீர் பிரச்சினையின் தீர்வுக்கு தீர்ப்பாயம் நிறுவும் பணி,

– இதனைத் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் புதிய நீதிமன்ற வளாகங்கள், கீழமைத் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டிடங்கள் என ஏற்படுத்தித் தமிழ்நாடு முழுவதற்குமான கீழமை நீதிமன்றங்களின் கட்டிடங்களைச் செம்மைப்படுத்திய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும்.

இதனைத் தொடர்ந்து கலைஞரால் அவரது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்களை எவராலும் மறக்க முடியாது.

பெண்களுக்குச் சொத்துரிமை,

பெண்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய சட்டம் உருவாக்குதல்,

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டம்,

திருநங்கை, மாற்றுத் திறனாளி எனப் பெயர் மாற்றங்கள்,

19+20+30=69 சதவிகிதம் இடஒதுக்கீடு.

எல்லா நிலைகளிலும் தமிழ்மொழியினை மாநில ஆட்சி மொழியாக்குதல்,

சட்டத்துறைக்கெனத் தனிப் பல்கலைக்கழகம் உருவாக்குதல்,

தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய இடம்கிடைக்கவும், உயர்நீதிமன்ற நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிகளாகப் பட்டியல் இனத்தவரை நியமிக்க உரிய நடவடிக்கை,

மாநில முதல்வர்கள் விடுதலை நாள் விழாவில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு உரிமை பெற்றுத் தந்தது,

மாநில சுயாட்சி குறித்து அறிக்கைத் தருவதற்கு நீதிபதி இராஜமன்னார் தலைமையில் குழு அமைத்தது,

மாநிலத் திட்டக் குழுவை அமைத்தது,

புதிய வாடகைக் குடியிருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது,

நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது,

பிற்பட்டோர் நலத்திற்குத் தனித்துறை உருவாக்கியது,

பின்தங்கிய வகுப்பினர் பிரிவில் மிகவும் பின்தங்கிய பிரிவு உருவாக்கம்,

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் பெற முயற்சிகள் மேற்கொண்டது,

1976இல் நெருக்கடி நிலைக்காலத்தில் கலைஞர் ஆட்சியை ஒன்றிய அரசு கலைத்தது. அதேபோல இலங்கையில் நடைபெற்று வந்த தொடர்போரின்போது கலைஞர் சலுகை காட்டினார் என 1991இல் இவரது ஆட்சியைக் கலைத்தனர்.

தொடர்ந்து 5 முறை முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் இரண்டு ஆண்டுகள் உடல் நலம் குறைவுற்று 2018 ஆகஸ்ட் 7ஆம் நாள் மருத்துவமனையில் உயிர் நீத்தார்.

இவரது மறைவிற்கு இந்திய அரசு ஒருவார காலம் துக்கம் கடைப்பிடித்து தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விட்டது.

அனைத்து அரசு மரியாதையுடன் நீண்ட நீதிமன்றப் போராட்டங்களுக்குப் பிறகு உயர்நீதிமன்ற ஆணைப்படி சென்னை மெரினா கடற்கரையில் அறிஞர் அண்ணா அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார்.

இவரது மறைவிற்கு நாடாளுமன்ற இரு அவைகளும் இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றின. அவையிலேயே உறுப்பினர் இல்லாத ஒருவருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியது மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

இவரது மறைவிற்கு உலகு எங்கும் உள்ள தமிழர்கள் சொல்ல முடியாத அளவில் துயரம் அடைந்தனர். உலகத் தமிழரின் ஒப்பற்றதலைவராக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் மறைவு தமிழ்கூறும் நல்லுலகிற்கும் ஒன்றிய அரசியலுக்கும் மிகப்பெரும் இழப்பாகும்.

பல பிரதம அமைச்சர்களையும், குடியரசுத் தலைவர்களையும் உருவாக்கிய பச்சைத் தமிழர், ஓய்வின்றி உழைத்த தமிழர், உன்னதத் தமிழர் கலைஞர் மறைவானது தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இப்படிப் பல சிறப்புகளும் கொண்ட கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 3.6.2023ல் தொடங்கி 3.6.2024 வரை ஒரு ஆண்டு காலமாகத் தமிழ்நாட்டில் பல்வேறு அரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மிக முக்கியமானது மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரால் நூற்றாண்டு நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தொடர்ந்து தமிழ்நாடு அரசும் உயர்நீதிமன்றமும் வழக்கறிஞர் குழுக்களும் தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டு வரமுயன்று வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவின் போது அவர் கொண்டு வந்த சட்டங்களையும் நீதித்துறைக்கு அவர் செய்த பணிகளையும் தமிழை நீதிமன்றங்களில் வழக்காடுமொழியாக கொண்டுவருவதற்கு எடுத்துவந்த பல்வேறு முயற்சிகளையும் தமிழில் சட்டநூல்கள் கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் செயல்படுத்த அவரின் நூற்றாண்டில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலைஞர் அவர்கள் நினைவாக, ஏதாவது ஓர் பல்கலைக்கழகத்திற்கு கலைஞர் பெயரை வைக்க வேண்டும்.

வெளிநாட்டில் கலைஞர் பெயரால் தமிழுக்கு மற்றும் சமூக நீதிக்கு என இரு இருக்கைகளை ஏதாவது ஓர் பல்கலைக்கழகத்தில் உருவாக்க வேண்டும்.

இனி ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் கலைஞரைப் போல் பல்வேறு துறைகளிலும் சிறந்த விளங்கிய தமிழ்நாடு வளர்ச்சிக்கு பல அரிய திட்டங்களை கொண்டு வந்த இன்னொரு தலைவர் கிடைப்பது என்பது சந்தேகமே!



நெல்லை மாவட்டம் தெற்கு கள்ளிகுளம் காமராஜ் நடுநிலைப் பள்ளியில் 416 ஊரகப் பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 17881 மாணவ – மாணவிகள் பயன்பெறும் வகையில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் துவக்கி வைத்து மாணவ – மாணவிகளுடன் அமர்ந்து உணவு அருந்தினார். உடன் மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் ஜெகதீஸ் உள்ளார்.

### வைகை அணையிலிருந்து - ரூ.565 கோடி மதிப்பில்

# ஆத்தூர் தொகுதிக்கு குழாய்மூலம் குடிநீர் கொண்டுவரப்படும்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!



திண்டுக்கல், ஜூலை16-

மிழக மக்கள் நலனுக்காக ஓய்வில்லாமல் உழைக்கும் ஒப்பற்ற தலைவராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளார் என்று என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற ஊரக பகுதிகளில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு வைகை அணையிலிருந்து ஆத்தூர் தொகுதிக்கு ரூ.565கோடி மதிப்பில் குடிதண்ணீர் குழாய் மூலம் கொண்டுவரப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதிபட பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட என்.பஞ்சம்பட்டி, அம்பாத்துரை, செட்டியபட்டி ஆகிய மூன்று கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய ஊரக பகுதியில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி என்.பஞ்சம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி தலைமை தாங்கினார். பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எம். பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மருதாம்பாள் ஆல்பர்ட், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆகியோர் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கிவிட்டு திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும்போது, தமிழக மக்கள் நலனுக்காக ஓய்வில்லாமல் உழைக்கும் ஒப்பற்ற தலைவராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளார் திமுக ஆட்சிக்கு வரும் முன்னரே உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகம் முழுவதும் வளம் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்களின் குறைகளை தீர்க்க புகார்பெட்டி வைத்து அதன் மூலம் தமிழக மக்களின் குறைகளை நிவர்த்தி செய்தார். ஆட்சிக்கு வருவதற்கு முன்பே மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தி ஒப்பற்ற தலைவர் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றார்.

தற்போது அரசு துவக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை விரிவாக்கம் செய்து அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் செயல்படுத்த முடிவு செய்து நேற்று (திங்கள் கிழமை) அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும சிற்றுண்டி திட்டத்தை துவக்கி வைத்துள்ளார். காரணம் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு மத, ஜாதி இன வேறுபாடின்றி செயல்படக்கூடிய ஒரேதலைவர் நம் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றார்.

சொல்வதை மட்டுமின்றி சொல்லாததையும் நிறைவேற்றி மக்கள் மனதில் 100சதவீதம் நம்பிக்கை நட்சத்திரமாக நம் முதல்வர் உள்ளார்.

ஆத்தூர் தொகுதி மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களின் குடிதண்ணீர் பிரச்சனையை தீர்க்க வைகை அணையிலிருந்து ரூ.565கோடி மதிப்பில் குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் செயல்பட உள்ளது. பொதுமக்களுக்கான நலத்திட்டங்களை, கோரிக்கை மனுக்களை நிறைவேற்றும் போது அவர்கள் தரும் ஆதரவுதான் எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு மென்மேலும் நலத்திட்டங்களை செயல்படுத்த ஊக்கம் தரும் நீங்கள் (பொதுமக்கள்) சிரித்தால்தான் நாங்கள் சிரிக்க முடியும். நீங்கள் வருத்தப்பட்டால் நாங்களும் வருத்தத்துடன் செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

நான் பஞ்சம்பட்டிக்கு எப்போது வந்தாலும் பொதுமக்கள் விடுக்கும் கோரிக்கையை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறேன். காரணம் எனக்கு என்றும் ஆதரவு தரும் கிராமங்களில் பஞ்சம்பட்டி ஊராட்சியும் ஒன்று - இப்போது இந்த பள்ளிக்கு (அரசுப்பள்ளி) புதிய கட்டிடம் வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். இன்று இரவே அதற்கான பணிகள் தொடங்கும் இது உறுதி என்றார். மேலும் மாணவர்கள் நலன் கருதி கூடுதலாக கழிப்பறை வசதியும் செய்துகொடுக்க உத்தரவிட்டுள்ளேன். அந்த பணியும் விரைவில் தொடங்கும். இசேவை மையங்கள் மூலம் பொதுமக்கள் அனுப்பும் மனுக்கள் முறையாக தாலுகா அலுவலகங்களுக்கு வருவதில்லை இதை மாவட்ட ஆட்சியர் கண்காணிக்க வேண்டும் காரணம் 7தொகுதிக்கும் கண்காணிக்க கூடியவர் நம்முடைய மாவட்ட ஆட்சியர் இனிமேல் இசேவை மையங்கள் மூலம் அனுப்பப்படும் மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க அந்தந்த பகுதி வட்டாட்சியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட வேண்டும். இம்மாதிரி முகாம்கள் மூலம் தமிழகத்தில் ஒரே நாளில் லட்சகணக்கான மக்கள் பயன்பெருகிறார்கள். இந்த திட்டத்தை தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் தமிழக முதல்வருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் நலனுக்காக தமிழகத்தில் நல்லாட்சி செய்து வரும் மக்களின் முதல்வர் முக.ஸ்டாலின் அவர்களுக்கு நாம் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

அதன்பின்னர் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் இடங்களுக்கு சென்று அவர்களின் குறைகளை கேட்டறிந்ததோடு பதிவு செய்யும் அலுவலர்களிடம் பொறுமையுடன் பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டு முறையாக தாமதமில்லாமல் பதிவு செய்து கொடுங்கள் என கூறினார்.

நிகழ்ச்சியில் ஆத்தூர் தாசில்தார் வடிவேல் முருகன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பிரபா, மண்டல துணை வட்டாட்சியர் பிரவீனா, வருவாய் ஆய்வாளர் நாகேந்திரன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமரவேல், அருள்கலாவதி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆத்தூர் முருகன், மாரியப்பன், சுதாராணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், திமுக நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் குமரேசன், துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விவேகானந்தன், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், விடுதலை முருகன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார், துணை ச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், பொருளாளர் கருப்பையா,

மாவட்ட பிரதிநிதி தங்கவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், ஊராட்சிமன்ற தலைவர்கள் செட்டியபட்டி ராஜா, பஞ்சம்பட்டி பாப்பாத்தி நாகராஜன், அம்பாத்துரை சேகர், பிள்ளையார்நத்தம் உலகநாதன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் காந்திகிராமம் ஜெயராமன், கோட்டை நிக்சன்பால், முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் வீரையா, அரசு ஒப்பந்தகாரர் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், ஒன்றிய மாணவரணி அருண், ஊராட்சிமன்ற செயலாளர்கள் சேசுராஜ், முன்னிலைகோட்டை சபின் தேவராஜ், அம்பாத்துரை செந்தில்குமார், செட்டியபட்டி பால்ராஜ், தொப்பம்பட்டி ராமசாமி, உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. நிகழ்வில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,மாவட்ட துணை செயலாளர் தமயந்தி, பொதுக்குழு உறுப்பினர் வேலன் குளம் கண்ணன்,பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, திருப்பதி ஜெயசீலன், முருகன், முத்தமிழ் ராஜா, பாண்டியன், பிரேம் ஆனந்த், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அருள்ராஜ் டார்வின், இஸ்ரவேல் பிரபாகரன், அனுராதா, ஜெயமாலதி, முத்துராமலிங்கம், வேல்பாண்டியன், அண்ணாதுரை, முருகன், வழக்கறிஞர்கள் சரவண மணிமாறன், சேக் முஜிபுர் ரகுமான், முத்துசாமி, மாரிமுத்து, வெங்கடாஜலபதி, சண்முகவேல், கே.சண்முகவேல், சுப்பிரமணியன், மணி,பாஸ்கர், மகாராஜன், பாலகிருஷ்ணன், ராஜாமணி, சுனில் மகேஷ், பழனி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.